**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்–2 திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்.</u>**

**முன்னிலை : திரு.க.பிரபு. எம்.ஏ., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**திருப்பத்தூர்.**

2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.172/2020**
**F.NO.3923/2020**
**CNR.NO.TNVL1C0039272020**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம், ...... புகார்தாரர்
குற்ற எண்.756/2016

// எதிரிடை//

சாய்கண்ணன், வயது–28(2016), த/பெ. சந்திரன் .....குற்றஞ்சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.172/2020 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம், குற்ற எண்.756/2016 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச பிரிவுகள் 279, 304–A |
| 4 | குற்றம் வனையப்பட்டது | இ.த.ச பிரிவுகள் 279, 304–A |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | |
| 5 | பெயர் மற்றும் தந்தை பெயர் | சாய்கண்ணன், வயது–20(2020), த/பெ. சந்திரன் |
| 6 | தொழில் | மருத்துவர் |
| 7 | முகவரி | முத்தையா நகர், கும்பகோணம் |
| நாள் | | |
| 8 | குற்ற நிகழ்வு | 24.11.2016 |
| 9 | புகார் | 24.11.2016 |
| 10 | கைது செய்யப்பட்ட நாள் | AB 15.12.2016 |
| 11 | எதிரி பிணையில் வந்த நாள் | AB 15.12.2016 |
| 12 | வழக்கு துவங்கிய நாள் | 06.11.2020 |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 04.09.2023 |
| 14 | தீர்ப்பு | விடுதலை |
| 15 | தாமதக் காரணம் | ––– |

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கின் நிலை | | | | |
| 16 | பிணைக்காலம் | விசாரணை முழுவதும் | | |
| 17 | குற்ற இறுதி தாக்கல் செய்த நாள் | 05.11.2020 | | |
| 18 | பிரிவு 240 கு.ந.மு.வி(முதல் கேள்வி) | 29.12.2021 | | |
| 19 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | ---- | | |
| 20 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 30.01.2023 | 30.01.2023 |
| | | அ.சா.2 | 30.01.2023 | 30.01.2023 |
| | | அ.சா.3 | 30.01.2023 | 30.01.2023 |
| | | அ.சா.4 | 06.03.2023 | 06.03.2023 |
| | | அ.சா.5 | 20.03.2023 | 20.03.2023 |
| | | அ.சா.6 | 20.03.2023 | 20.03.2023 |
| | | அ.சா.7 | 10.07.2023 | 10.07.2023 |
| | | அ.சா.8 | 29.08.2023 | 29.08.2023 |
| 21 | பிரிவு 313 கு.ந.மு.வி(வினாவல்) | 31.08.2023 | | |
| 22 | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இந்த வழக்கு 06.11.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 04.09.2023 இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையிடுபவர் தரப்பில் உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 திரு.S.நந்தகுமார்,M.L., அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.மாது, M.Com.,B.L.,DLL., அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும் சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் கடந்த 24.11.2016 அன்று காலை சுமார் 10.45 மணிக்கு சாட்சி–1 மணிகண்டன், த/பெ. கண்ணுக்கான் திருப்பத்தூர் டூ திருவண்ணாமலை சாலையில் விசமங்கலம் பாம்பாறு பாலத்திடம் அவருக்கு சொந்தமான CD 100 இருசக்கர வாகனத்தில் திருப்பத்தூர் நோக்கி சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் எதிரி சாய்கண்ணன் TN.68.Q.7117 என்ற பதிவெண் கொண்ட Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிகொண்டு சாட்சி–1 ஓட்டி சென்ற வாகனத்தை கடந்து சென்றபோது, அவருக்கு எதிர் திசையில் TN.23.BE.0025 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover இருசக்கர வாகனத்தில் வந்த இவ்வழக்கில் இறந்துபோன நவீன்குமார் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதால், நவீன்குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டு அவர் இறந்துவிட்டதாக எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304–A–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள் புரிந்துள்ளார் என்று திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அரசு தரப்பில் தாக்கலான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304–A–ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து விளக்கிக் வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு விசாரணைக்காக அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிருந்தும் தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு,

4. இவ்வழக்கின் புகார் கொடுத்த அ.சா.1 திரு.மணிகண்டன் த/பெ. கண்ணுக்கான்

விஷமங்கலம் கிராமத்தில் வசிக்கிறார். அவர் தற்போது தபால்காரராக வேலை செய்து வருகிறார். இவ்வழக்கில் இறந்துபோன நவீன்குமார் அ.சா.1–ன் சித்தப்பா மகன். அ.சா.4 திரு.முருகன் நவீன்குமாரின் அப்பா. அ.சா.3 திரு.சந்தோஷ்குமார் நவீன்குமாரின் தம்பி. கடந்த 24.11.2016 அன்று காலை சுமார் 10.45 மணியளவில் அ.சா.1 அவருக்கு சொந்தமான CD–100 இருசக்கர வாகனத்தில் திருப்பத்தூர் டூ திருவண்ணாமலை சாலையில், விஷமங்கலம் பாம்பாறு பாலத்திடம் திருப்பத்தூர் நோக்கி வந்துள்ளார். அப்போது அவருக்கு பின்னால் எதிரி சாய்கண்ணன் TN.68.Q.7117 என்ற பதிவெண் கொண்ட Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று அ.சா.1–ன் வாகனத்தை கடந்து வந்துள்ளார். அப்போது அவருக்கு எதிர் திசையில் நவீன்குமார் TN.23.BE.0025 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover இருசக்கர வாகனத்தில் திருவண்ணாமலை நோக்கி சென்றவர் மீது எதிரி மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார். மேற்படி விபத்தில் நவீன்குமாருக்கு வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டு கால் முறிந்தும், இடது கையில் இரத்தகாயமும், முகத்தில் வலதுபக்க சிராய்ப்பு காயமும், தலையின் வலது முன்பக்கத்தில் இரத்த காயமும், வலது இடது பக்க கை முட்டிகளில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. பின்னர் காயம்பட்ட நவீன்குமாரை அ.சா.1–ம், அங்கிருந்த மற்றவர்களும் அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி கொண்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளனர். அங்கு மருத்துவர்கள் நவீன்குமாருக்கு முதல் உதவி சிகிச்சையளித்து மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அப்போது மாலை சுமார் 05.00 மணியளவில் நவீன்குமார் சென்னைக்கு செல்லும் வழியிலேயே இறந்துள்ளார். பின்னர் மேற்படி விபத்து சம்மந்தமாக 24.11.2016 அன்று அ.சா.1 திரு.மணிகண்டன் த/பெ. கண்ணுக்கான் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகாரை கொடுத்துள்ளார்.

5. மேற்படி அ.சா.ஆ.1 புகார்மனுவை காவல் உதவி ஆய்வாளர் திருமதி.நிர்மலா அவர்கள் பெற்று, அதனை பரிசீலனை செய்து திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.756/2016 இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304–A–ன் கீழ் அ.சா.ஆ.3

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கு கோப்பினை மேற்படி உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் ஆரம்பகட்ட விசாரணை அதிகாரியான அப்போதைய காவல் ஆய்வாளர் அ.சா.8 திரு.செந்தில் அவர்கள் பார்வைக்கு வைத்ததை அவர் தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மறுநாள் 25.11.2016 அன்று காலை சம்பவயிடம் சென்று சாட்சிகள் அ.சா.5 திரு.சம்பத் மற்றும் அ.சா.6 திரு.விஜய் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் மேற்படி விசாரணை அதிகாரி அன்றைய தினமே திருப்பத்தூர் அரசு மருத்துவமனை சவகிடங்கிடம் சென்று அங்கு சாட்சிகள் அ.சா.1 திரு.மணிகண்டன், த/பெ. கண்ணுக்கான், அ.சா.2 திரு.மணிகண்டன், த/பெ. முருகன், அ.சா.3 திரு.சந்தோஷ்குமார், அ.சா.4 திரு.முருகன், திரு.அருள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் நவீன்குமாரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ.5 பிரேத விசாரணை அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் மேற்படி விசாரணை அதிகாரி இறந்த நவீன்குமாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் மேற்படி விசாரணை அதிகாரி இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN.68.Q.7117 என்ற பதிவெண் கொண்ட Ford காரையும், விபத்திற்க்குள்ளான TN.23.BE.0025 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் மேற்படி அ.சா.8 பணிமாறுதலில் சென்றதால் இவ்வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் திரு.உலகநாதன் அவர்கள் தன்னுடைய விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கு விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்களை விசாரித்து அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். பின்னர் மேற்படி விசாரணை அதிகாரி இவ்வழக்கில் இறந்துபோன நவீன்குமாரின் பிரேதத்தினை பரிசோதித்து சவகிடங்கில் வைக்க அனுமதித்த மருத்துவர் திரு.செந்தில்நாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு பெற்றுள்ளார். பின்னர் மேற்படி விசாரணை அதிகாரி இவ்வழக்கில் இறந்துபோன நவீன்குமாரின்

பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.பிரபாகரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். பின்னர் மேற்படி விசாரணை அதிகாரி இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304–A–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 திரு.மணிகண்டன், த/பெ. கண்ணுக்கான், சம்பவத்தை பற்றியும் போலீசாரிடம் புகார் கொடுத்ததை பற்றியும், அ.சா.2 திரு.மணிகண்டன், த/பெ. முருகன், அ.சா.7 திரு.அருள் ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்த்ததை பற்றியும், அ.சா.3 திரு.சந்தோஷ்குமார், அ.சா.4 திரு.முருகன் ஆகியோர் சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றியும், அ.சா.5 திரு.சம்பத், அ.சா.6 திரு.விஜய் ஆகியோர் பார்வை மகஜர் தாயர் செய்தது பற்றியும், அ.சா.8 திரு.செந்தில், அப்போதைய காவல் ஆய்வாளர் (தற்போதைய திருப்பத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர்) அவர்கள் அவர் சார்பாகவும், இவ்வழக்கின் இறுதிகட்ட விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.மதனலோகன் அவர்கள் சார்பாகவும் இவ்வழக்கு புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும், மேற்படி அரசு தரப்பு சாட்சிகளில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டு அத்துடன் அரசு தரப்பின் சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

7. மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களில் அமைந்துள்ள எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(ஆ) பிரிவின் கீழ் வினவியபோது மேற்படி சாட்சியத்தை பொய் சான்றுரைத்ததாகக் கூறி தன் தரப்பில் சாட்சியம் எதுவுமில்லை எனவும் கூறினார். இருதரப்பின் வாதமும் கேட்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304–A ன் கீழ் சாட்டப்பட்ட குற்றம் தகுமுறை ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு

நிருபிக்கப்பட்டுள்ளது என்றால் எதிரிக்கு உண்டான தண்டனை என்ன?

**தீர்வு**

9. இருதரப்பு கேட்கப்பட்டது. வழக்கு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் கடந்த 24.11.2016 அன்று காலை சுமார் 10.45 மணிக்கு அ.சா.1 மணிகண்டன், த/பெ. கண்ணுக்கான் திருப்பத்தூர் டூ திருவண்ணாமலை சாலையில் விசமங்கலம் பாம்பாறு பாலத்திடம் அவருக்கு சொந்தமான CD 100 இருசக்கர வாகனத்தில் திருப்பத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் எதிரி சாய்கண்ணன் TN.68.Q.7117 என்ற பதிவெண் கொண்ட Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, அ.சா.1 ஓட்டி வந்த வாகனத்தை தாண்டி சென்றபோது, அவருக்கு எதிர் திசையில் இவ்வழக்கில் இறந்துபோன நவீன்குமார் TN.23.BE.0025 என்ற பதிவெண் கொண்ட Bajaj Discover இருசக்கர வாகனத்தில் சென்றவர் மீது எதிரி சாய்கண்ணன் மோதி விபத்து ஏற்படுத்தியதால், நவீன்குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டு அவர் இறந்துவிட்டதாக எதிரி மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304–A–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்கள் புரிந்துள்ளார் என்று குற்றங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

10. மேற்படி எதிரி மீதான குற்ற செயல்களை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் ஆராய்ந்து அரசு தரப்பில் கூறப்பட்டது போல எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று ஆராய்கையில், இவ்வழக்கில் புகார் கொடுத்த அ.சா.1 திரு.மணிகண்டன், த/பெ. கண்ணுகான் 30.01.2023 அன்று தனது சாட்சியத்தில், சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அவர் தன்னுடைய ஊரிலிருந்து பொருள் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் திருவண்ணாமலை டூ திருப்பத்தூர் சாலையில் திருப்பத்தூருக்கு வந்து கொண்டிருந்தபோது, வெப்பலாம்பட்டி மேம்பாலம் அருகில் உள்ள சாலை வளைவில் கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டு

தனது உறவினர் நவீன் குமார் கீழே விழுந்து கிடந்ததாகவும், அவருக்கு உடல் முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அவரை ஆட்டோவில் வைத்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், பின்னர் தான் மேற்படி விபத்தை குறித்து அவரது வீட்டிற்கு தகவல் கூறியதாகவும், பின்னர் மேற்படி விபத்து ஏற்பட்ட இடத்தில் போலீசார் அங்கு வந்து விசாரித்து, மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டி வந்த நபர் குறித்து தன்னிடம் கூறியதன் அடிப்படையில் தான் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார்மனு கொடுத்ததாகவும், பின்னர் விபத்தில் காயமடைந்த நவீன்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் கிடைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் போலீசார் தன்னிடம் வெள்ளைதாளில் கையொப்பம் வாங்கியதாகவும், தான் விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் என்றுதான் போலீசாரிடம் கூறியிருந்ததாகவும், அவர் பெயர் விவரம் என்னவென்று சொல்லவில்லை என்றும், தான் சம்பவயிடம் செல்வதற்கு முன்பே அங்கு அ.சா.2 திரு.மணிகண்டன், த/பெ. முருகன் மற்றும் திரு.அருள் ஆகியோர் இருந்தார்கள் என்று கூறியுள்ளார். எனவே மேற்படி அ.சா.1–ன் சாட்சியத்தின்படி சம்பவத்தில் எதிரி மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவாக ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்றும், அவர் அதனை பார்த்ததாகவும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

11. மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறப்படும் அ.சா.2 திரு.மணிகண்டன், த/பெ. முருகன் தனது சாட்சியத்தில் கடந்த 2016–ம் ஆண்டு ஒரு நாள் தான் திருப்பத்தூர் செல்வதற்காக திருப்பத்தூர் டூ திருவண்ணாமலை சாலையில் ஆட்டோவில் சென்று கொண்டிருந்தபோது, வெப்பலாம்பட்டி மேம்பாலம் அருகில் உள்ள சாலை வளைவில் கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டு நவீன் குமார் கீழே விழுந்து கிடந்ததாகவும், தான் அருகில் சென்று பார்த்து, தானும், அ.சா.1–ம் ஆட்டோவில் நவீன்குமாரை சிகிச்சைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை யார் ஓட்டி வந்தார்கள் என்று தனக்கு தெரியாதென்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில் விபத்து குறித்து தனக்கு

நேரடியாக எதுவும் தெரியாதென்று கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

12. மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறப்படும் மற்றொரு சாட்சியான அ.சா.7 திரு.அருள், தனது சாட்சியத்தில் கடந்த 2016–ம் வருடம் ஒருநாள் காலை நேரத்தில் திருப்பத்தூர் டூ திருவண்ணாமலை சாலையில் வெப்பாலம்பட்டி கிராமத்தில் தனது வீட்டின் முன்பாக நவீன்குமார் என்பவருக்கு சாலை விபத்து ஏற்பட்டு காயம்பட்டிருந்ததாகவும், தான் அங்கிருந்தவர்களை விசாரித்தபோது, இருசக்கர வாகனம் மீது கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கூறியதாகவும், பின்னர் நவீன்குமாரை அந்த வழியாக வந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறி அ.சா.7 மேற்படி விபத்தை நேரடியாக பார்க்காததை போன்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

13. மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.3 திரு.சந்தோஷ்குமார், தனது சாட்சியத்தில் கடந்த 24.11.2016 அன்று தனது தம்பி நவீன்குமாருக்கு சாலை விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தனக்கு போன் மூலம் தகவல் வந்ததாகவும், உடனே தான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்து, அவரை மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவர் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.3 தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் மேற்படி விபத்து குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாதென்று கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

14. மேற்படி சம்பவத்தை கேள்விப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.4 திரு.முருகன், தனது சாட்சியத்தில் கடந்த 24.11.2016 அன்று தன் மகன் நவீன் குமார் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில் திருப்பத்தூருக்கு சென்று மீண்டும் தங்கள் ஊருக்கு திருப்பத்தூர் டூ திருவண்ணாமலை சாலையில் விஷமங்கலம் பம்பாறு பாலத்திடம் வந்து கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் வந்த கார் ஒன்று

அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தனக்கு தகவல் வந்ததாகவும், உடனே தான் சம்பவயிடம் சென்றபோது, அதற்குள் அவரை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால், தான் அங்கு சென்று தனது மகனை பார்த்தபோது, அவருக்கு கையிலும், தலையிலும், காலிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் அவரை மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.4 தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் மேற்படி விபத்தை பற்றி தனக்கு நேரடியாக தெரியாதென்றும், மேற்படி விபத்து யாருடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதென்று தனக்கு தெரியாதென்று கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 திரு.சம்பத், தனது சாட்சியத்தில் கடந்த 2016-ம் ஆண்டு ஒரு நாள் காலை 10.00 மணியிலிருந்து 11.00 மணியளவில் தான் ஆட்டோவில் வாடகைக்காக திருப்பத்தூர் சென்றுக் கொண்டிருந்தபோது, தன்னுடைய உறவினர் நவீன்குமார் என்பவருக்கு சாலை விபத்து ஏற்பட்டு, கடுமையான காயங்கள் இருப்பதாக தனக்கு போன் மூலம் தகவல் வந்ததாகவும, பின்னர் தான் விபத்து நடந்த விஷமங்கலம் கொரட்டி கூட்டு ரோட்டிற்கு சென்றபோது, அதற்குள் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாகவும், அவர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, எதிரில் வந்த கார் ஒன்றை ஒரு ஆட்டோ முந்தி செல்லும்போது, மோதி விபத்து ஏற்படுத்தியதாக அங்கிருந்தவர்கள் தகவல் கூறியதாகவும், பின்னர் மேற்படி விபத்து சம்மந்தமாக மறுநாள் போலீசார் அங்கு பார்வையிட்டு வரைபடம் வரைந்து அ.சா.ஆ.2 பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதற்கு சாட்சியாக பார்வை மகஜரில் தான் 2 வது சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.5 தன்னுடைய குறுக்கு விசாரணையில் தனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாதென்றும், மேற்படி விபத்து யாருடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டதென்று தனக்கு தெரியாதென்றும், தன் முன்பாக

போலீசார் எந்தவொரு ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், தான் பார்வை மகஜரில் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாதென்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

16. பார்வை மகஜரின் மற்றொரு சாட்சியான அ.சா.6 திரு.விஜய் தனது சாட்சியத்தில் கடந்த 2016–ம் ஆண்டில் மேற்படி விபத்து நடந்த மறுநாள் மாலை போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதற்கு சாட்சியாக பார்வை மகஜரில் தான் 1வது சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.6 தன்னுடைய குறுக்கு விசாரணையில் தன் முன்பாக போலீசார் எந்தவொரு ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், தான் பார்வை மகஜரில் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றோ, அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றோ தனக்கு தெரியாதென்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

17. மேற்படி சாட்சிகளின் விசாரணைக்கு பின்னர் இவ்வழக்கின் ஆரம்பகட்ட விசாரணை அதிகாரியான அப்போதைய காவல் ஆய்வாளரும், தற்போதைய திருப்பத்தூர் காவல் துணை கண்காணிப்பாளரான திரு.செந்தில் அவர்கள் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

18. மேற்படி 1 முதல் 8 வரையிலான சாட்சியங்களையும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களையும் உடனினைந்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட புகார்தாரர் மற்றும் சம்பவ சாட்சியான அ.சா.1 திரு.மணிகண்டன், த/பெ. கண்ணுகான் மற்றும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறப்படும் அ.சா.2 திரு.மணிகண்டன், த/பெ. முருகன் மற்றும் அ.சா.7 திரு.அருள் மற்றும் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகளான அ.சா.3 திரு.சந்தோஷ்குமார், அ.சா.4 திரு.முருகன் ஆகியோர் இவ்வழக்கில் எதிரி மேற்படி TN.68.Q.7117 என்ற பதிவெண் கொண்ட Ford காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி இறந்துவிட்ட நவீன்குமார் ஓட்டி வந்த இருசக்கர

வாகனத்தின் மீது மோதி அவர் நிலை தடுமாறி கீழே விழுந்ததாக கூறப்படும் சங்கதிகள் குறித்து குறிப்பிட்டு நிலைத்து நின்று சாட்சியமளிக்கவில்லை. மேலும் பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.5 திரு.சம்பத் மற்றும் அ.சா.6 திரு.விஜய் ஆகியோரின் சாட்சியம் மூலம் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் இவ்விபத்து ஏற்பட்டதாக எவ்விதமான சங்கதியும் வெளிப்படவில்லை. மேலும் இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை அரசு தரப்பில் அடையாளப்படுத்தி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும் சம்பவ தினத்தில் எதிரி அந்த வாகனத்தை அஜாக்கிரதையாகவும் மற்றும் அதிவேகமாகவும் இயக்கி அதன் விளைவாக நவீன்குமார் இறந்துவிட்டார் என அரசு தரப்பில் தெளிவான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

19. எனவே, மேற்படி விபத்து நடந்து ஒருநபர் இறந்துள்ளார் என்ற ஒரு காரணத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட நபரை அனுமானத்தின் பேரில் தண்டிக்க இயலாது. எதிரி வழக்கு சம்பவத்தில் எவ்வாறு ஈடுபட்டுள்ளார் என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் யாருடைய தவறுதலால் விபத்து ஏற்பட்டது என நிரூபணம் செய்ய வேண்டும். மேற்படி பத்திகளில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின்படி அரசு தரப்பில் எந்த ஒரு சாட்சியும், சம்பவ நேரத்தில் எதிரி மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்தினார் என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்து மேற்படி இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304-A கூறப்பட்டுள்ள உட்கூறுகளை எடுத்துரைக்காத சூழ்நிலையில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றங்களை அவருக்கு எதிராக நிரூபித்ததாக ஏற்க இயலாது. எனவே, மேற்சொன்ன விவாதங்களின் அடிப்படையில் விபத்திற்கு யார் காரணம் என்பது குறித்து எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக்கி எதிரிமீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அரசு தரப்பில் தெளிவாக நிரூபணம் செய்யப்படாத நிலையில் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு சாதகமாக வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளிப்பதே நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதி மேற்படி இவ்வழக்கு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

20. இறுதியாக, (i) எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279 மற்றும் 304–A ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீரப்பளிக்கிறது.

(2) எதிரி மீது அரசு தரப்பின் வழக்கில் எழும் சந்தேகங்களின் பலனை வழங்கி விடுதலை செய்திருப்பதால் அவர் எழுதிக் கொடுத்திருக்கிற பிணைமுறி மேல் முறையீட்டுக் காலத்துக்குப் பின்பு ரத்தாகிவிடும் என்றும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

(3) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2023–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 07 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K PRABU Digitally signed by K PRABU Date: 2023.09.07 16:14:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்.**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.மணிகண்டன், த/பெ. கண்ணுகான் |
| அ.சா.2 | திரு.மணிகண்டன், த/பெ. முருகன் |
| அ.சா.3 | திரு.சந்தோஷ்குமார் |
| அ.சா.4 | திரு.முருகன் |
| அ.சா.5 | திரு.சம்பத் |
| அ.சா.6 | திரு.விஜய் |
| அ.சா.7 | திரு.அருள் |
| அ.சா.8 | திரு.செந்தில், காவல் துணை கண்காணிப்பாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்.**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 24.11.2016–ம் தேதியிட்ட புகார்மனு |
| அ.சா.ஆ.2 | 25.11.2016–ம் தேதியிட்ட பார்வை மகஜர் |

அ.சா.ஆ.3 24.11.2016–ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5 25.11.2016–ம் தேதியிட்ட பிரேத விசாரணை அறிக்கை

அ.சா.ஆ.6 16.12.2016–ம் தேதியிட்ட விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை

அ.சா.ஆ.7 15.12.2016–ம் தேதியிட்ட விபத்திற்க்குள்ளான வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை

அ.சா.ஆ.8 24.11.2016–ம் தேதியிட்ட விபத்து பதிவேடு

அ.சா.ஆ.9 25.11.2016–ம் தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்று பொருள்</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை
**<u>எதிரி தரப்பு சான்று பொருட்கள்</u>** – இல்லை

K PRABU Digitally signed by K PRABU Date: 2023.09.07 16:14:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
திருப்பத்தூர்.